# திருவாரூர் நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2021-2022 ஆம் ஆண்டு
## (1.4.2021 முதல் 31.3.2022முடிய)

# திருவாரூர் நகராட்சி
## 2021-2022 ஆண்டு நிர்வாக அறிக்கை
## 01.04.2021 முதல் 31.03.2022 முடிய

### அறிக்கை விபரம்

**ஆட்சி எல்லை:**

வரலாற்றுப்புகழ் மிக்கதும், சரித்திரப்புகழ் பெற்றதுமான மிகப்பழைமை வாய்ந்த பாடல் பெற்ற திருநகரான திருவாரூர் நகராட்சி 1914ம் ஆண்டு நிறுவப்பெற்றது. திருவாரூர் தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர், நாகப்பட்டிணம் மாவட்டங்களின் நடுவில் நான்கு புறங்களிலும் புகைவண்டி மற்றும் பேருந்து தொடர்புடையதாக விவசாயமும், வியாபாரமும் ஒருங்கே வளர்ந்து வரும்நகரமாக அமைந்துள்ளது. இதன் எல்லைக்குள் வருவாய் கிராமங்கள் பின்வருமாறு உள்ளது. (1) விளமல், (2) விஜயபுரம், (3) திருவாரூர் (4) திருவாரூர் வடக்கு சேத்தி (5) கீழக்காவாலகுடி (6) ராமகே (7) பழவனங்குடி (8) சுந்தரவிளாகம் பகுதி (9) கிடாரங்கொண்டான் 19.10.91 முதல் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு நாகப்பட்டிணத்தை தலைநகரமாக கொண்டு நாகப்பட்டிணம் மாவட்டமாக செயல்பட்டு வந்ததை பிரித்து 01.01.1997 முதல் திருவாரூர் தலைநகரமாக கொண்ட திருவாரூர் மாவட்டம் உதயமாகி செயல்பட்டு வருகிறது(அரசு ஆணை எண். 1398/ வருவாய்த்துறை / 30.12.1996)

| | |
|---|---|
| இந்நகராட்சி எல்லையின் மொத்தப்பரப்பு | : 10.47 ச.கி.மீ |
| 1971ம் ஆண்டின் குடியிருப்பு மக்கட்தொகை | : 35858 |
| 1981ம் ஆண்டின் குடியிருப்பு மக்கட்தொகை | : 43654 |
| 1991ம் ஆண்டின் குடியிருப்பு மக்கட்தொகை | : 49194 |
| 2001ம் ஆண்டின் குடியிருப்பு மக்கட்தொகை | : 56341 (ஆண்கள் 28595, பெண்கள் 27746) |
| 2011ம் ஆண்டின் குடியிறுப்பு மக்கள்தொகை | : 58279 (ஆண்கள் 29144, பெண்கள் 29135) |
| 2011ம் ஆண்டின் குடியிறுப்பு மக்கள்தொகை | : 58301 (ஆண்கள் 28397, பெண்கள் 29904) |

இந்நகராட்சியை 18.3.1978ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.414ன்படி முதல்நிலை நகராட்சியாக 1.4.1978 முதல் உயர்த்தபபட்டு மேற்படி தேதியிலிருந்து தொடர்ந்து முதல்நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது.

அறிக்கை ஆண்டில் (2021-2022). 01.04.2021முதல் 31.03.2022 வரை ஆணையர் தனிஅலுவலராக இருந்து வருகிறார்.

| | | |
|---|---|---|
| 1. நியமனக்குழு | 1.திருமதி.புவனப்பிரியா செந்தில் | – தலைவர் |
| | 2.திரு.சு.பிரபாகரன், பி.இ., ஆணையர் | |
| | 3..திரு.எஸ்.பிரகாஷ் | – உறுப்பினர் |
| 2. ஒப்பந்தக்குழு | 1.திருமதி.புவனப்பிரியா செந்தில் | – தலைவர் |
| | 2.திரு.சு.பிரபாகரன், பி.இ., ஆணையர் | |
| | 3..திரு.S.N.அசோகன் | – உறுப்பினர் |
| 3. வரிமேல்முறையீட்டுக் குழு | 1.திரு.கோ.வரதராஜன் | – உறுப்பினர் |
| | 2.திரு.ரா.சின்னவீரன் | – உறுப்பினர் |
| | 3. திரு.ஜெ.அய்யனார் | – உறுப்பினர் |
| | 4.திரு.எஸ்.அன்வர் உசேன் | – உறுப்பினர் |

**கூட்டம்: 1.4.2021 முதல் 31.3.2022முடிய நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை**

| | 1.4.2021 முதல் 31.3.2022 முடிய நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரணகூட்டம் | 10 | 235 |
| அவசர கூட்டம் | 2 | - |
| சிறப்பு கூட்டம் | - | - |
| **மொத்தம்** | **12** | **235** |

**குழுக்கள்:**

1920ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 68, 70ன் கீழ் அமைக்கப்பெற்ற ஒப்பந்தக்குழு, நியமனக்குழு தவிர அறிக்கையாண்டில் வரி முறையீட்டுக்குழுவும் இருந்தது. அறிக்கையாண்டில் குழுக்கள் கீழ்க்கண்டவாறு பொருட்கள் முடிவு செய்தது.

| வ. எண் | குழுவின் பெயர் | 1.4.2021 முதல் 31.3.2022 முடிய நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | ஒப்பந்தக்குழு | - | - |
| 02 | நியமனக்குழு | - | - |
| 03 | வரிமேல்முறையீட்டுகுழு | - | - |

**இடவசதி:**

திருவாரூர் நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் புதிய அலுவலக கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

அறிக்கையாண்டில் 1.4.2021 முதல் 31.03.2022 வரை பணிபுரிந்த அலுவலர்கள்

**ஆணையாளர்:**

திரு,**சு.பிரபாகரன், பி.இ,.** ஆணையர் 20.05.2021 முதல் **நாளது தேதி** வரை

மேலாளர்

1. திரு ரெ.முத்துக்குமார் 11.07.2020 முதல் நாளது தேதி வரை

**கணக்கர்**

1.திருமதி. மீ. சீத்தாலெட்சுமி கணக்கர் 01.04.2020 முதல் நாளது தேதி வரை

| வழக்குகள் விபரம் | அறிக்கையாண்டில் நிலுவையில் உள்ள வழக்குகள் எண்ணிக்கை |
|---|---|
| சொத்துவரி | - |
| தொழில்வரி | - |
| வரியிலா இனம் | - |
| நகரமைப்பு பிரிவு | 3 |
| நிர்வாகம் தொடர்புடையவை | 2 |
| குறைந்தசெலவிலான கழிவறை கட்டும்திட்டம் | - |
| பொறியியல் பிரிவு | 1 |
| மொத்தம் | 6 |

## பணியாளர்கள் ( பொதுப்பிரிவு )

அறிக்கையாண்டில் 2021-2022 ல் ஆணையரின் தலைமையின் கீழ் மேலாளர், மேற்பார்வையில் கீழ்க்கண்ட பணியாளர்களைக்கொண்டதாக இருந்தது.

- மேலாளர் - 1
- கணக்கர் - 1
- உதவியாளர் - 2
- இளநிலை உதவியாளர்கள் - 12
- தட்டச்சர்31.05.2009 காலிபணியிடம்.
- பதிவறை எழுத்தர் - 2
- அலுவலக உதவியாளர்கள் -7 காலிபணியிடம் – 2
- இரவு காவலர் -1 (28/02/2022 முதல் காலியிடம்

### வருவாய் பிரிவு: 01.04.2021 முதல் 31.03.2022 வரை

- அறிக்கையாண்டில் 2 வருவாய் ஆய்வர் 9 வருவாய் உதவியாளர்களும், அறிக்கையாண்டில், வருவாய் ஆய்வராக திரு.கோ.மதியழகன் மற்றும் திருடி.முருகதாஸ் . வருவாய் ஆய்வர் ஆகியோர் வருவாய் ஆய்வர்களாக பணியாற்றி வந்துள்ளனர். மேலும் 01.04.2021 முதல் 31.03.2022 வரை வருவாய் ஆய்வராக திரு.டி.முருகதாஸ் திரு.கோ.மதியழகன் பணியாற்றி வருகின்றனர்.

### நகரமைப்பு பிரிவு :

- இந்நகராட்சி 2 நகரமைப்பு ஆய்வாளர்களைக்கொண்டதாகும். (1.4.2020 முதல் 26.11.2021) முடிய ) **திரு.வே.கணேசரெங்கன்** தற்போது 26.11.2021 முதல் நகரமைப்பு ஆய்வர் பணியிடம் 1 ஆக மாற்றப்பட்டுள்ளது.
- அறிக்கையாண்டில் 23.11.2021 முதல் வே **திரு.வே.கணேசரெங்கன்** கணேசரங்கன்அறிக்கையாண்டு முடியும் வரையிலும் நகரமைப்பு ஆய்வர்களாக பணியாற்றியுள்ளார்.
- ஒரு இளநிலை உதவியாளர் இப்பிரிவில் பணியாற்றி வந்துள்ளனர்.

### நகரமைப்புத்திட்டங்கள் 01.04.2021 முதல் 31.03.2022 முடிய

இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட நகரமைப்புத்திட்டங்கள் 4 உள்ளது. மேலும் இரண்டு நகரமைப்பு திட்டங்கள்( எண். 5 மற்றும் 6) அரசினரின் அனுமதி பெற வேண்டி நடவடிக்கைகளில் இருந்து வருகின்றது. தவிர 20.12.77ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.239-ன்படி அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தற்போதுள்ள நகரமைப்புத்திட்டங்கள் நீங்கலாக நகரின் பிற பகுதிகளை 9 பிரிவு அபிவிருத்தி திட்டங்களாக பிரித்து நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கும் அரசினரின் ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டு நடவடிக்கைகளில்உள்ளது.

### கட்டிட மனுக்கள்:

| | | |
|---|---|---|
| அறிக்கையாண்டில் வரப்பெற்ற மனுக்கள் | : | 142 |
| அனுமதி வழங்கப்பட்டது | : | 110 |
| அனுமதி மறுக்கப்பட்டது | : | 28 |

### அனுமதி இல்லாமல் பெறும் கட்டுமானம்

| | | |
|---|---|---|
| அனுமதியற்ற கட்டுமானங்கள் | : | 19 |
| அதில் அனுமதி பெற்றவை | : | 1 |

**மனைப்பிரிவுகள்**

| | | |
|---|---|---|
| வரப்பெற்ற மனைப்பிரிவு விண்ணப்பங்கள் | : | 3 |
| நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களுக்கு | : | |
| ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது | : | 3 |
| ஒப்புதல் பெறப்பட்டது | : | - |
| ஒப்புதல் நிலுவை | : | - |

**கட்டிட அனுமதி**

இந்நகராட்சி நகரமைப்புப்பிரிவில் அரசாணை நிலை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி1) துறை, நாள்.04.02.2020ன்படி தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் 2500 சதுர அடிக்கு மேற்படாத நிலத்தில் 1200 சதுரஅடி பரப்பளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டங்களுக்கு ஆவணங்களின் அடிப்படையில் இணையதளம் வாயிலாக கட்டட அனுமதி மற்றும் திட்ட அனுமதி விரைந்து வழங்கப்படுகிறது.இதர கட்டிடங்களுக்கும் இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பெறப்பட்டு இணையதளம் வாயிலாகவே திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட அரசாணை நிலை எண் தொடர்பாக நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4367/19/நவாஉ, நாள் 24.09.2020 ல் தெரிவித்துள்ள அதிகார பகிர்வின்படி தற்போது 7000 சதுரஅடி வரை குடியிருப்பு கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி இணையதளம் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

எனவே மேற்கண்ட அரசாணையின்படி கட்டிட உரிமம் இதர உரிம கட்டணங்கள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2020 விதி 14ன்படி நகராட்சி உரிமைஆணை கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டு திருவாரூர் மாவட்ட அரசிதழ் நவம்பர் 11 2020 அன்று வெளியிடப்பட்டு அதன்படி உரிமையாணை கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் வசூவிக்கப்பட்டு வருகிறது.

**அனுமதியற்ற மனைபிரிவு வரன்முறைப்படுத்தல்**

இந்நகராட்சி நகரமைப்புப்பிரிவில் அரசாணை நிலை எண்.78, நகராட்சி நிர்வாகம் மற்ம் குடிநீர் வழங்கல் (UD4(3)) நாள்.04.05.2017ன்படி அனுமதியற்ற மனைப்பிரிவு மனைகள் அங்கீகரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு வளர்ச்சி மற்றும் வான்முறை கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

வளர்ச்சி கட்டணம் – ரூ.1 7,92,650/–

வரன்முறைக்கட்டணம் – ரூ. 9,02,415/–

**நகர்நல பிரிவு**

நகர் நலப்பிரிவு ஒரு துப்புரவு அலுவலர் (பொ) அவர்களின் தலைமையின் கீழ் கீழ்க்கண்ட பணியாளர்களைக்கொண்டதாக இருந்தது அறிக்கையாண்டில் 06.07.2016 முதல் 31.03.2021 வரை துப்புரவு அலுவலர் **திரு.எஸ்.விஜயகுமார்** பணியாற்றி வருகிறார்.

| | | | |
|---|---|---|---|
| 1) | துப்புரவு அலுவலர் | : | 1 |
| 2) | துப்புரவு ஆய்வர்கள் | : | 2 |
| 3) | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | : | 4 |
| 4) | மகப்பேறு உதவியாளர்கள் | : | - |
| 5) | மகப்பேறு ஆயாக்கள் | : | 1 |
| 6) | ஒட்டுநர்கள் | : | 9 |
| 7) | லாரி துலக்குநர் | : | - |
| 8) | களப்பணியாளர் உதவியாளர் | : | - |
| 9) | துப்புரவு பணியாளர்கள் | : | 62 |

**பொறியியல் பிரிவு:**

இந்நகராட்சி பொறியியல் பிரிவானது பொறியாளரின் தலைமையில் கீழ்க்கண்ட பணியாளர்களைக்கொண்டதாக இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| 1) | நகராட்சி பொறியாளர் | : | 1 |
| 2) | பொதுப்பணி மேற்பார்வையாளர் | : | 1 |
| 3) | பணி ஆய்வர் | : | 1 |
| 4) | மின்னாளர் | : | 0 |
| 5) | மீட்டர்ரீடர் | : | - 31.12.2009 முதல் காலியிடம் |
| 6) | ஒயர்மேன் | : | 0 |
| 7) | பைப் லைன் பிட்டர் | : | 2 |
| 8) | பவுண்டன் கிளீனர் | : | 1 |
| 9) | பூங்கா காவலர் | : | 1 |
| 10) | தலைமை நீரேற்று நிலைய கிளீனர் | : | - |
| 11) | தலைமை நீரேற்று நிலைய காவலர் | : | 2 |
| 12) | அவன்யூ கூலி | : | - |
| 13) | கேங்கூலி | : | 1 |
| 14) | மின்கம்பி உதவியாளர் | : | 3 |

**மருத்துவமனை :**

பழைய நகராட்சி மருந்தக கட்டிடத்தின் உள்ள அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கொடிக்கால்பாளையத்தில் இயங்கி வருகிறது.அதில் நகராட்சி பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1) | துப்புரவு பணியாளர் | : | - |
| 2) | இரவு காவலர் | : | 1 |
| 3) | மகப்பேறு ஆயா | : | 1 |

**நிர்வாகசெலவினம்:**

அறிக்கையாண்டில் புதிய கணக்கு முறை தொடர்ந்து அமுலில் இருந்துவருகிறது கீழ்கண்டவாறு நிர்வாகச்செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | | | வரவு | செலவு |
|---|---|---|---|---|
| 1) | பொது நிதி | : | ரூ. 327626433 /- | 316039244/- |
| 2) | குடிநீர் நிதி | : | ரூ. 43045680/- | 47511095/- |
| 3) | கல்வி நிதி | : | ரூ. 11519937/- | 9767346/- |

**போக்குவரத்து :**

நகரத்திலிருந்து வெளியூர்களுக்கு செல்லும் பேருந்துகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தாலும் தனியாராலும் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகரத்திலிருந்து நகரப்பேருந்துகள் அரசு மற்றும் தனியார் துறையில் கீழ்கண்ட வழித்தடங்களில் இயக்கப்படுகிறது.

கொரடாச்சேரி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டிணம், நாகலூார், நன்னிலம், குடவாசல், எட்டுக்குடி, தண்ணீர்குன்னம், எரவாஞ்சேரி, மோகனுார், அம்மையப்பன், திருநெல்லிக்காவல் , திருமருகல், திருவிடைச்சேரி, வாழ்க்கை, கழனிவாசல், மன்னார்குடி, வடபாதிமங்கலம், நீடாமங்கலம், நாகூர், சாட்டியகுடி, தேவூர், பேரளம், திருமதிகுன்னம், மோகனுார், முசிறியம், மாவட்டக்குடி, செருவாமணி, ஆலத்தம்பாடி.

## வரியில்லா இனம்:

இந்நகராட்சியில் பலன் தரத்தக்க இனங்களின் கீழ் ஓராண்டு குத்தகை இனங்களான பேருந்துநிலைய பேருந்துகளுக்கான கட்டண வசூல், சைக்கிள் பாதுகாப்பு இடம் கட்டண வசூல் நவீன கழிப்பறை கட்டண வசூல், வாரச்சந்தை கட்டண வசூல், போன்ற இனங்களிலிருந்து 2021-2022 அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படிக்கு வருமானம் வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| 01 | நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம் வசூல், செய்து கொள்ளும் உரிமம் | 360100 |
| 02 | புதிய பேருந்துநிலையத்தில் வந்துபோகும் பேருந்துகளுக்கும் தினசரி கட்டணம் பகல் இரவு இரண்டு வேளையும் வசூல், செய்து கொள்ளும் உரிமம் | - |
| 03 | பழைய பேருந்துநிலையத்தின் உட்புறம் உள்ள காலியிடத்தில் லாரிகள் சுற்றுலா பேருந்துகள் வாடகை கார்கள் கைவண்டிகள்ஆகியவை நிறுத்துவதற்கான கட்டணம் வசூல், செய்துகொள்ளும் உரிமம் | 630009 |
| 04 | நகராட்சி ஆடுவதை சாலையில்கட்டணம் தண்டும் உரிமம் | 129130 |
| 05 | நகராட்சி புதிய பேருந்துநிலைய சைக்கிள் பாதுகாப்பகத்தில் வைக்கப்படும சைக்கிள் மோட்டார் சைக்கிள்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - |
| 06 | நகராட்சி பேருந்துநிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - |
| 07 | நகராட்சி நாளங்காடியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 299780 |
| 08 | கமலாலயம் கீழ்கரை நகராட்சி கட்டண கழிப்பிடத்தை உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 78855 |
| 09 | கோவில்துறையான் சந்தில் மீன்விற்கும் கடை களில் கட்டணம் தண்டும் உரிமம் | - |
| 10 | நகராட்சி தங்கும் விடுதியில் கட்டணம் வசூலிக்கும்உரிமம்(2009-2010) | - |
| 11 | புதிய பேருந்துநிலையத்தில் டி.வி.மூலம் விளம்பரம் செய்தல் | - |
| 12 | பனகல்சாலை வேன் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | - |
| 13 | பனகல்சாலை வேன் நிறுத்துமிடம் அருகில் உள்ள ஆட்டோ நிறுத்தத்தில் கட்டணம் வசூல் செய்தல் | 42000 |
| 14 | தாழை.மு.கருணாநிதி வணிக வளாக சைக்கிள் பாதுகாப்பகம் | . |
| 15 | மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டண கழிப்பிடம் | - |
| 16 | மனித எடைபார்க்கும் இயந்திரம்ட மூலம் வசூல் | 54600 |

மேற்கண்ட குத்தகை இனங்கள் நீங்கலாக புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடைகள், பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள், ஜூப்ளிமார்க்கெட் கடைகள் வள்ளுவர் மார்க்கெட் கடைகள் நாளங்காடி கடைகள் வாரசந்தை முன்புறமுள்ள ஐ.யு.டி.பி. திட்டக்கடைகள் பனகல் சாலையில் உள்ள தாழை.மு.கருணாநிதி வணிக வளாக கடைகள் இவற்றின் மூலம் நகராட்சிக்கு அறிக்கையாண்டில் ரூ. 104.69 (லட்சத்தில்) கேட்பாக உள்ளது.

## தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம்:NULM

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (National Urban Livelihood Mission) திட்டமானது மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியின் (75:25) கீழ் மாவட்ட தலைநகரங்கள் மற்றும் ஒரு லட்சத்திற்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள நகரங்களில் நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டம் ஆகும்.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ்க்கண்ட உட்கூறுகளை உள்ளடக்கியதாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1. சமக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன வளர்ச்சி (SMID).
2. சுய வேலை வாய்ப்புத்திட்டம் (SEP).
3. திறன் மேம்பாட்டுப் பயிற்சி மூலம் வேலைவாய்ப்பு (ESTP).
4. நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு உதவுதல் (SUSV)
5. நகர்ப்புற வீடற்றவர்களுக்கான புகளிடம் அமைக்கும் திட்டம் (SUH)

## சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன வளர்ச்சி (SMID)

நகர்ப்புறங்களில் உள்ள ஏழைப் பெண்களை ஒருங்கினைக்கும் பொருட்டு முதற்கட்டமாக குறைந்த பட்சம் 10 மகளீர்களை கொண்டு குழுக்கள் ஆரம்பித்தல் பகுதி அளவிலான மகளீர் கூட்டமைப்புகள் மற்றும் நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தி சமுதாய கூட்டமைப்பால் பல பதிவு நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்படும் திட்டம்.

இந்த உட்கூறுவின் கீழ் 2015–16 ஆண்டில்

மொத்த நிதி ஒதுக்கீடு ரூ 333000/–

------------

செலவினம் ரூ 69000/–

மேலும் இந்த தரப்பின் கீழ் 25 மகளீர் குழுக்கள் புதிதாக துவக்கப்பட்டுள்ளதுடன் பகுதி அளவிலான கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு உதவுதல் (SUSV)

இந்த தகவலின் இந்நகர்ப்புற பகுதிகளில் உள்ள சாலையோற வியாபாரிகளை செயல்திறன் கொண்டவர்களாக மேம்படுத்துவதுடன் வங்கிகள் மூலம் கடன் வழங்கி அவர்களது நிறுவனங்களை வளர்ச்சி அடையச் செயதலுடன் சமூக பாதுகாப்பு வழங்கப்படும்.
முதற்கட்டமாக திருவாரூர் நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலையோற வியாபாரிகள் பற்றி கணக்கெடுப்பு மேற்கொள்ள 280 நாட்களில் இருந்து புள்ளி விவரம் சேர்க்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.
நிதி ஒதுக்கீடு – ரூ 100000/–

-------

செலவினம் ரூ 84000/–

## நகர்ப்புற வீடற்றவர்களுக்கான புகளிடம் அமைக்கும் திட்டம் (SUH)

நகர்ப்புற பகுதியல் விடற்றவர்களுக்கு புகலிடம் அமைத்து அடிப்படைவசதிகள் கிடைக்க பெறச் செய்வதுடன் நகர்ப்புற ஏழை மக்களில் மிகவும் வறுமையில் வாடுபவர்களுக்கு அத்தியாவாசியமான சேவைகளை அளிப்பது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.
திருவாரூர் நகராட்சிப் பகுதியில் விடற்றவர்கள் பற்றிய கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது.51 நாள் கண்டறியப்பட்டு புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டுள்ளது.அவர்களுக்கு புகலிடம் அமைப்பதற்கு உரிய தாம்கோவில் தெரு உள்ள புகலிடம் கட்டிடம் 25.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
மேற்படிதங்கமிடத்தில்உள்ளபயனாளிகளுக்குVirtueதொண்டுநிறுவனத்தின்மூலம்உணவுமற்றும்ப ராமரிப்புவசதிமேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## பள்ளிக் கட்டிடங்கள் மேல் நிலை (ம) உயர்நிலைப் பள்ளிகள்

திருவாரூர் நகராட்சியில் நான்கு ஆரம்ப பள்ளிகளும் இரண்டு நடுநிலைப்பள்ளிகளும் ஒரு உயர்நிலை பள்ளியும் **1989** வரை நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. **01.01.1990** முதல் இப்பள்ளிகள் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பராமரிப்பில் மேல்நிலைபள்ளிகள் ஏதும் இல்லை நகர எல்லைக்குள் ஆண்களுக்கு ஒரு மேல்நிலைப்பள்ளியும், பெண்களுக்கு ஒரு மேல்நிலைப்பள்ளியும் இருபாலருக்கும் ஒரு உயர்நிலைப்பள்ளியும் தனியாரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. கொடிக்கால் பாளையத்தில் அரசினர் மேல்நிலைப்பள்ளி ஒன்றும் இயங்கிவருகிறது.

ஐந்து ஆரம்ப பள்ளி கட்டிடங்களும் இரண்டு நடுநிலைப்பள்ளி மற்றும் ஒரு உயர்நிலைப்பள்ளி கட்டிடமும் நகராட்சி பராமரிப்பில் இருந்துவருகிறது.

## கல்லூரி :

கிடாரங்கொண்டான் (திருவாரூர் நாகை சாலை) யில் இரு பாலருக்கும் அரசினர் கலைக்கல்லூரி ஒன்றும் வாசன் நகர் பகுதியில் ராபியத்தம்மாள் அகமது மைதீன் பெண்கள் தனியார் கல்லூரி ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

## பொது நூல் நிலையங்கள்:

மடப்புரம் கல்யாணசுந்தர முதலியார் நகராட்சி இலவச நூல் நிலையமும் படிப்பகமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி விஜயபுரம் பகுதியில் மாவட்டநூலக குழுவினரின் கிளை நூலகம் ஒன்றும் இயங்கி வருகிறது.

## நோயாளிகள் :

அறிக்கையாண்டில் **2021-2022**ல் கொடிக்கால்பாளையம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு **2340** நபர்கள் சிறு உபாதைகளுக்கு சிகிச்சை பெற்றனர் மற்றும் பழைய மருத்துவமனை வடக்குப்புறம் உள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய கட்டிடம் **60.00** லட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது..

## இடவசதி :

கொடிக்கால்பாளையம் நகராட்சி மருத்துவ மனை நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கிவருகிறது. அறிக்கை ஆண்டில் மருந்துகள் ஊதியங்கள் மற்றும் இதர செலவுக்காக ரூ **150000/–** செலவிடப்பட்டுள்ளது.

## தேசியநகர்புறவாழ்வாதாரஇயக்கம் 2015-16

திருவாரூர் நகராட்சியின் மூலம் திருவாரூர் தலைமை மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமனையில் நேயாளிகள் உடன் இருப்பவரின் தங்கும் இடம் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.75.00 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

# பொறியியல் பிரிவு

## பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம்

- குடிநீர் ஆதாரம் 1. அம்மையப்பன் 2. கொள்ளிடம் வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டம்
- அம்மையப்பன் குடிநீர் திட்டம் துவக்கப்பட்ட ஆண்டு 6.10.1973
- கொள்ளிடம் வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டம் துவக்கப்பட்ட ஆண்டு 30.11.2004
- அம்மையப்பன் குடிநீர் திட்டத்தின் கீழ் தினசரி பெறப்படும் குடிநீரின் அளவு15.00லட்சம் லிட்டர்கள்
- கொள்ளிடம் வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தினசரி பெறப்படும் குடிநீரின் அளவு 19.00 லட்சம் லிட்டர்கள்
- மினி பவர் பம்பு மற்றும் மார்க் 2 பம்புகளின் மூலமாக தினசரி பெறப்படும் குடிநீரின் அளவு10.50 லட்சம் லிட்டர்கள்

- கிடாரங்கொண்டான் நகர் மற்றும் ஐ.பி.கோவில் தென்றல் நகர் தெருவில் அமைந்துள்ள விசை பம்புகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் அளவு 8.00 லட்சம் லிட்டர்
- நகரின் தேவைக்கு தினசரி பயன்படுத்தப்படும் குடிநீரின் கூடுதல் அளவு 52.70லட்சம் லிட்டர்கள்
- நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு தினசரி வழங்கப்படும் குடிநீரின் அளவு 90 லிட்டர்கள்
- பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் பயன் அடையும் மக்கள் தொகை 64590
- நகரின் உள்ள பகிர்மான குழாய்களின் நீளம் 74.000கி.மீட்டர்
- நீரேற்று குழாயின் நீளம் 50.000கி.மீட்டர்
- தினசரி குடிநீர் வழங்கப்படும் நேரம் காலை 6.00 முதல் 8.00 மணி முடிய
- பொது குடிநீர் குழாய்களின் எண்ணிக்கை : 145
- வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை : 4157
- ஆழ்குழாய்களின் மொத்த எண்ணிக்கை : 140
- மினி பவர் பம்புகளின் எண்ணிக்கை : 108
- மேல்நிலை தொட்டிகளின் எண்ணிக்கை : 5
- மேல்நிலை தொட்டிகளின் அமைவிடம் தென்றல் நகர் (2லட்சம் லிட்டர் கொள்ளளவு ) கிடாரங்கொண்டான் (60000 லிட்டர் கொள்ளளவு ) ஐ.பி.கோயில் தெரு (30000 லிட்டர் கொள்ளளவு ) மடப்புரம் (11.36 லட்சம் லிட்டர் கொள்ளளவு ) மற்றும் சந்தை பேட்டை (15 லட்சம் லிட்டர் கொள்ளளவு )

- நகரில் குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்கிட அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையத்தில் 62கேவிஏ திறன் கொண்ட ஜெனரேட்டர் ஒன்றும், மடப்புரம் நீர்தேக்க நிலையத்தில் 32கேவிஏ திறன் கொண்ட ஜெனரேட்டர் ஒன்றும் பயன்படுத்தப்பட்டது.

## பாதாள சாக்கடை திட்டம்

- பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திட அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.09.2006ன்படி ரூ.39.26 கோடிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அரசாணை எண். 132 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 28.2.2011ன் படி ரூ.53.07 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.
- தலைமை பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தஞ்சாவூர் அவர்களின் 26.09.2006ம் தேதிய சி.இ/இஆர்/தஞ்சாவூர்/12/2006–07 எண்ணிட்ட உத்தரவின்படி தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டது.
- நிதி ஆதாரம்

| | |
|---|---|
| அ) அரசு மானியம் | ரூ. 24.84கோடி |
| ஆ) நகராட்சி பங்களிப்பு | ரூ. 9.34 கோடி |
| இ) கடன் | ரூ. 6.88கோடி |

- இத்திட்டத்தின் கீழ் கழிவு நீரேற்று நிலையங்கள் ராமகே, அரசன் குளம், திருமஞ்சன வீதி, செட்டிகுளம் மற்றும் சீனிவாசபுரம் ஆகிய 5 இடங்களில் நான்கு இடங்களில் கழிவு நீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ராமகே என்ற இடத்தில் 9.47 ஏக்கர் நிலத்தில் அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முடிக்கப்பட்டு தற்போது மேற்படி சுத்திகரிப்பு நிலையம்

தமிழ்நாடு வடிகால் வாரியத்திற்கு பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கு நாள் ஒன்றுக்கு தற்போது 3.88 எம்.எல்.டி கழிவு நீர் சுத்தரிகரிக்கப்பட்டு வருகிறது.

- ஆள்இறங்கும் தொட்டிகள் 2445 எண்ணிக்கை அமைக்கப்பட்டுள்ளது.
- வீட்டு இணைப்புகள் 5899எண்ணிக்கை வழங்கப்பட்டுள்ளது.
- தற்போது பாதாள சாக்கடை திட்டம் பராமரித்தலும் மற்றும் இயக்குதல் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.
- வீட்டு இணைப்புகள் 2159 எண்ணிக்கை வழங்கப்பட வேண்டும்.

## பாதாளசாக்கடைத்திட்டப்பணி

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்பாதாளசாக்கடை பாதாளக்குழாயில் 5009 எண்ணிக்கையிலான வீட்டு இணைப்புகளுக்கும் கழிவு உறை குழாய் மூலம் வெளியேற்றும் பணி ரூ.368.00 மதிப்பீட்டில் **TNUDF** வின் மூலம் கடனாக பெற்ற பணி நடைபெற்று வருகிறது தற்போது 3791 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.மேலும் இணைப்புகள்வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

## இயக்குதல் மற்றும் பராமரித்தல்

இந்நகராட்சிக்குட்பட்ட பாதாளச்சாக்கடை திட்டத்தினை தனியார் வசம் மூன்றாண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.87.66இட்சம் மற்றும் ஒவ்வொரு ஆண்டிற்கும் கூடுதலாக 6 சதவீதம் கொடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## சாலைகள்

- அறிக்கை ஆண்டில் கீழ்கண்டவாறு சாலைகள் பயன்பாட்டில் இருந்தன.

| | |
|---|---|
| அ) தார் சாலைகள் | 74.910 கி.மீட்டர் |
| ஆ) சிமெண்ட் சாலைகள் | 13.932 கி.மீட்டர் |
| இ) பேவர் பிளாக் ரோடு | 9.144 கி.மீட்டர் |
| ஈ)மண்சாலை | 0.470 கி.மீட்டர் |
| கூடுதல் | 98.456 கி.மீட்டர் |

- அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட விபரபடி தார்சாலைகள் மேம்படுத்தப்பட்டது.

## வடிகால்

- அறிக்கை ஆண்டில்27.148கி.மீட்டர் நீளமுள்ள வடிகால் நகராட்சியால் பராமரிக்கப்பட்டது.

## தெருவிளக்குகள்

- அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட விபரப்படி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| அ) குழல்விளக்குகள் (எல்இடி) | 3177 எண்ணிக்கை |
| ஆ) சோடியம் ஆவி விளக்குகள் | 465 எண்ணிக்கை |
| இ) உயர்மின் கோபுர விளக்குகள் | 12எண்ணிக்கை |
| **கூடுதல்** | **3654 எண்ணிக்கை** |

# திருவாரூர் நகராட்சி

## 2021-22ம் ஆண்டு நடைபெற்ற திட்டப்பணிகளின் விவரம்

| வ. எண் | திட்டம் | பணிகளின் விபரங்கள் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020-21 | வார்டு எண்.28 திருவாரூர் புறவழிச்சாலை மேம்பாலம் அருகில் பயணியர் நிழற்குடை கட்டும் பணி. | 25.00 |
| 2 | தேசியநகர்புற வாழ்வாதார இயக்கம் - 2020-21 | திருவாரூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளை பார்க்க வரும் பார்வையாளர்கள் மற்றும் உடன் தங்குபவர்கள் தங்கும் கட்டிடம் கூடுதலாக கட்டும் பணி. | 110.00 |
| 3 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021-22 | சிப்பம் - 1, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வஉசி தெரு, கமலாம்பாள் தெரு, சுவாமி மடத்தெரு மற்றும் காந்தி நகரில் தார் சாலை அமைக்கும் பணி.(வார்டு எண்.2 மற்றும் 9) | 106.90 |
| 4 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021-22 | சிப்பம்-2, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட காமாட்சி அம்மன் கோவில் (மேல் புறம், தென்புறம்), ஸ்ரீ தேசி நகர், விஎஸ்ஆர் நகர், சம்மந்த மூர்த்தி பிள்ளையார் கோவில் தெரு சந்து, முனிசிபல் பேட்டை, கணபதி பிள்ளையார் கோவில் சந்து, சீராத்தோப்பு - 1, சிராத்தோப்பு -2ல் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி.(வார்டு எண்.2,4,16 & 20) | 103.80 |
| 5 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021-22 | சிப்பம் - 3, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட மருதபாடி, கோவில் துறையான் சந்து, மஜித் தோப்பு, சிவன் கோவில் தெரு, புள்ளத் தெரு, ஐ.பி கோவில் தெரு, ஆத்தாகுளம், ஐபி கோவில் வடக்குதெரு, சந்தைப்பேட்டை, அண்ணாசாலை, ஜுப்ளி மார்கெட்டில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி.(வார்டு எண்.9,12,25,27,28) | 104.80 |
| 6 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021-22 | சிப்பம் - 4, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பிடாரி கோவில் தெரு, ஈவிஎஸ் நகர், விருப்பாட்சி நடப்பு, காயிதே மில்லத் தெருவில் தார்சாலைகள் அமைக்கும் பணி.(வார்டு எண்.6,10,13) | 110.90 |

| | | | |
|---|---|---|---|
| 7 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021–22 | சிப்பம் – 5, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழைய மருத்துவமனை ரோடு, மேலகொத்தத் தெரு, நெய்விளக்குத் தோப்பில் தார்சாலைகள் அமைக்கும் பணி.(வார்டு எண்.16,6,&20) | 104.50 |
| 8 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021–22 | சிப்பம் – 6, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட விருப்பாட்சி நடப்பு தெரு முதல் கேக்கரைவரை தார்சாலை அமைக்கும் பணி.(வார்டு எண்.9) | 167.00 |
| 9 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021–22 | சிப்பம் – 7, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட தியாகி சத்திய மூர்த்தி தெரு, அண்ணா சதுக்கம், காணியாளர் தெரு, தியாகி சாரங்கபாணி தெரு(தெற்கு தெரு), வண்டிக்காரத் தெருவில் தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல் (வார்டு எண்.12,13,21 &22) | 72.10 |
| 10 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021–22 | சிப்பம் – 8, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட நெய்விளக்குத்தோப்பு (அண்ணாகாலனி), வசம்போடைத் தெரு, வசம்போடைத் தெரு சந்து, தியாகி சின்னசாமித் தெரு, தியாகி சாரங்கபாணி தெரு, தியாகராஜபுரம் அக்ரஹாரம், கிடாரம்கொண்டான் முடுக்குத்தெருவில் பேவர் பிளாக் அமைக்கும் பணி.(வார்டு எண்.21,22 & 24) | 104.30 |
| 11 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021–22 | சிப்பம் – 9, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலைய தார்சாலை ஆர்சிசி கல்வெட் மற்றும் மழைநிர் வடிகால் அமைக்கும் பணி.(வார்டு எண்.28) | 125.70 |
| 12 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண்சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றி அமைக்கும் பணி. | 413.93 |
| 13 | மூலதன மானிய நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் கழிவறைகள் கட்டும் பணி. | 40.00 |
| 14 | இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் வட்டி நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட தெற்குகொத்த தெருவில் உள்ள சமுதாய கழிப்பிடத்தினை மராமத்து செய்யும் பணி. | 4.00 |

| | | | |
|---|---|---|---|
| 15 | இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் வட்டி நிதி 2021-22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பேபிடாக்கீஸ் ரோட்டில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தினை மராமத்து செய்யும் பணி. | 5.00 |
| 16 | இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் வட்டி நிதி 2021-22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட சாமந்தான்பாளையத்தில் உள்ள பொதுக்கழிப்பிடத்தினை மராமத்து செய்யும் பணி. | 4.00 |
| 17 | இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் வட்டி நிதி 2021-22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட காட்டுக்காரத்தெருவில் உள்ள பொதுகழிப்பிடத்தினை மராமத்து செய்யும் பணி. | 3.50 |
| 18 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22 | திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கும் பணி. | 197.54 |
| 19 | 15வது நிதிக்குழு 2020-21 (பகுதி-2) | திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீர்உந்து நிலையம், கீழ்நிலைத் தொட்டி, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் சிறுமின் விசைப்பம்பு மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 10.00 |
| 20 | 15வது நிதிக்குழு 2020-21 (பகுதி-2) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளச்சாக்கடை உந்து நிலையங்களில் 3HP நீர்மூழ்கி மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 8.00 |
| 21 | 15வது நிதிக்குழு 2020-21 (பகுதி-2) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளச்சாக்கடை உந்துநிலையங்களில் 4HP நீர்மூழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 9.00 |
| 22 | 15வது நிதிக்குழு 2020-21 (பகுதி-2) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளச்சாக்கடை உந்து நிலையங்களில் 7HP நீர்மூழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 13.00 |
| 23 | 15வது நிதிக்குழு 2020-21 (பகுதி-2) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளச்சாக்கடை உந்து நிலையங்களில் 10HP நீர்மூழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 14.00 |
| 24 | 15வது நிதிக்குழு 2020-21 (பகுதி-2) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளச்சாக்கடை உந்து நிலையங்களில் 25HP நீர்மூழ்கி மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 11.00 |

| | | | |
|---|---|---|---|
| 25 | 15வது நிதிக்குழு 2020–21 (பகுதி–2) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட திருமஞ்சனவீதி மற்றும் கேக்கரையில் அமைந்துள்ள பாதாளச்சாக்கடை கழிவுநீரேற்று நிலையங்களில் 30HP மற்றும் 50HP நீரில் மூழ்காத மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 18.00 |
| 26 | 15வது நிதிக்குழு மானியம் 2021–22 | மடப்புரம் மற்றும் தென்றல் நகர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி வளாகத்தில் மின்னாக்கி அமைக்க அறைகட்டுதல் 40கேவிஏ மற்றும் 32 கேவிஏ மின்னாக்கிகள் விநியோகம் செய்யும் பணி. | 15.00 |
| 27 | 15வது நிதிக்குழு மானியம் 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதியதாக நகர்நல மையம் கட்டிடம் கட்டும் பணி. | 25.00 |
| 28 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பிடாரி கோவில் குளத்தினை புதுப்பிக்கும் பணி. | 109.00 |
| 29 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஐபி கோவில் குளத்தினை புதுப்பிக்கும் பணி. | 123.00 |
| 30 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.5 ஆசாத் நகரில் சிறுபாலம் அமைக்கும் பணி (பகுதி –1) | 5.53 |
| 31 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.5 ஆசாத் நகரில் சிறுபாலம் அமைக்கும் பணி (பகுதி – 2) | 6.45 |
| 32 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.11 ஐய்யனார் கோவில் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி. | 6.55 |
| 33 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.17 பஜனைமடத்தெருவில் சிறுபாலம் அமைக்கம் பணி. | 5.40 |
| 34 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.17 பெருமாள் மேலவீதியில் சிறுபாலம் அமைக்கும் பணி. | 6.20 |
| 35 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.17 பெருமாள் சன்னதியில் சிறுபாலம் அமைக்கும் பணி (பகுதி – 1) | 5.35 |

| | | | |
|---|---|---|---|
| 36 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.17 பெருமாள் சன்னதியில் சிறுபாலம் அமைக்கும் பணி (பகுதி – 2) | 5.10 |
| 37 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.5 புதுத்தெருவில் பழுதடைந்த சாலையினை பேவர் பிளாக் சாலையாக அமைத்தல். | 2.60 |
| 38 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.29 புகையிலைத்தோட்டதில் உள்ள மண்சாலைகளை பேவர் பிளாக் சாலையாக அமைத்தல். | 10.20 |
| 39 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant) | வார்டு எண்.7 கப்பல் நகரில் உள்ள மண்சாலைகளை பேவர் பிளாக் சாலையாக அமைத்தல். | 9.75 |
| 40 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Tied Grant)(Solid Waste Management) | நகராட்சி உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் சேகரமாகும் வளமீட்பு மையக் கட்டிடம் கட்டுதல். | 20.00 |
| 41 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Tied Grant)(Solid Waste Management) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1ல் இருந்து 20 வரை உள்ள பழுதடைந்த பாதாளச்சாக்கடை ஆள்இறங்கம் தொட்டியின் மூடிகளை புதியதாக மாற்றி அமைக்கும் பணி. | 18.00 |
| 42 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Tied Grant)(Solid Waste Management) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்21ல் இருந்து 30 வரையுள்ள பழுதடைந்த பாதாளச்சசாக்கடை ஆள்இறங்கும் தொட்டியில் மூடிகளை மாற்றி அமைக்கும் பணி. | 13.00 |
| 43 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Tied Grant)(Water supply) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வாசன் நகர், மருதப்பாடி மற்றும் பிடாரி கோவில் தெருவில் பழுதடைந்த குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றி அமைக்கும் பணி. | 8.00 |
| 44 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Tied Grant)(Water supply) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பைபாஸ் ரோடு, விஆர்எம் ரோடு மற்றும் ரயில்வே கீழ்பாலத்தில் பழுதடைந்த குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றி அமைக்கும் பணி. | 18.00 |
| 45 | 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Tied Grant)(Water supply) | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட சாதுசுப்பையா நகர், கேபிஏ நகர், குருஜி நகர் மற்றும் ராமநாத நகரிலுள்ள பழுதடைந்த குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றி அமைக்கும் பணி. | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 46 | பொது நிதி | கொரோனா நோய் தொடர்பான தீவர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் (தடுப்புகள் அமைத்தல் மற்றும் இதர பணிகள்) | 10.00 |
| 47 | பொது நிதி | திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தினை பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ளுதல். | 1.30 |
| 48 | பொது நிதி | , வார்டு எண்.7, கொடிக்கால்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதியதாக கட்டிடம் கட்டும் பணி (நிறைவு பெறாத பணிகள் மட்டும்) | 5.00 |
| 49 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி பழைய அலுவலக கட்டிடத்தின் கிழக்கு பகுதி மராமத்து ம்ற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | 4.90 |
| 50 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி பழைய அலுவலக கட்டிடத்தின் மேற்கு பகுதி மராமத்து மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | 5.00 |
| 51 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தினை மராமத்து மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | 4.85 |
| 52 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தின் முன்பகுதியில் அணையரது அறையினை மாற்றி அமைக்கும் பணி. | 5.00 |
| 53 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிவறையினை பராமரிப்பு செய்யும் பணி. | 3.00 |
| 54 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சியில் சுதந்திரதின விழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தற்காலிக கழிவறை, குடிநீர் வசதி மற்றும் தகவல் தொடர்பு மையம் அமைக்கும் பணி. | 0.70 |
| 55 | பொது நிதி | இந்நகராட்சிக்கு சொந்தமான ஜீப் வாகனம் எண்.TN50F 6520க்கு தகுதிச்சான்று பெறுவதற்கான மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல். | 1.25 |

| | | | |
|---|---|---|---|
| 56 | பொது நிதி | இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாளச்சாக்கடை கழிவுநீர் அடைப்பு நீக்கம் வாகனம் எண்.TN50 AF 2882க்கு தகுதி சான்று பெறுவதற்கான மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல். | 1.25 |
| 57 | பொது நிதி 2021–22 | வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கும் வகையில் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணி. | 9.00 |
| 58 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்ட எண்.9 விருப்பாட்சி நடப்பு முதல் கேக்கரை ரயில்வே கேட் வரை மற்றும் புதிய / பழைய பேருந்து சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளதனை தற்காலிக நீக்கம் செய்யும் பணி. | 3.60 |
| 59 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள ஜெனரேட்டர் அறையினை பழுதுநீக்கம் செய்யும் பணி. | 3.90 |
| 60 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்ல் உள்ள கழிவறைகளை பராமரித்தல், வெளிபுற பாதையில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல். | 4.20 |
| 61 | பொது நிதி – 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கிடாரங்கொண்டான் பகுதியில் உள்ள பழைய பயனியற் நிழற்குடையினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக பயனியற் நிழற்குடை அமைக்கும் பணி. | 2.00 |
| 62 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் பொதுப்பிரிவு, கட்டிடப்பிரிவு, புனரமைத்தல் மற்றும் முதல் தளத்தில் உள்ள வருவாய் பிரிவு அலுவலகத்தின் மேற்கூரை புதியதாக மாற்றி அமைக்கும் பணி. | 6.00 |

| | | | |
|---|---|---|---|
| 63 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 கேக்கரை சாலையின் ஓரத்திலுள்ள பக்கச்சுவரினை (Retaining Wall) அமைக்கும் பணி. | 5.30 |
| 64 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி அலுவலக தரைத்தள கட்டிடத்தின் தென்பகுதியினை நகர்மன்றக் கூடமாக மாற்றி அமைக்கும் பணி. | 10.00 |
| 65 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி அலவலக முதல்தளக் கட்டிடத்தினை பொது சுகாதார பிரிவு மற்றும் வருவாய் பிரிவு அலுவலகங்களாக மாற்றி அமைக்கும் பணி. | 10.00 |
| 66 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான கணினி, மடிக்கணினி மற்றும் பிரிண்டர்கள் விநியோகம் செய்யும் பணி. | 7.30 |
| 67 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சி அலுவலகத்திற்கு 5கேவிஏ யூபிஎஸ் மற்றும் 16 எண்ணிக்கையுடன் கூடிய 42ஏஎச் பேட்டரிகள் விநியோகம் செய்யும் பணி. | 1.65 |
| 68 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சியில் குடியரசுதின விழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தற்காலிக கழிவறை, குடிநீர் வசதி மற்றும் தகவல் தொடர்பு மையம் அமைக்கும் பணி. | 0.70 |
| 69 | பொது நிதி 2021–22 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் 2022னை முன்னிட்டு நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 30 வரையுள்ள நகர்மன்ற உறுப்பினர்களுக்கான வேட்பு மனுக்களை பெறுவதற்கு ஏதுவாக ஐந்து உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான அறைகள் அமைத்தல் தேவையான உபகரணங்கள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணி. | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 70 | பொது நிதி 2021–22 | நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022னை முன்னிட்டு நகராட்சியின் அலவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூடத்திற்கு தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கான மேசை நாற்காளிகள் புதியதாக விநியோகம் மற்றும் பொருத்தும் பணி. | 9.50 |
| 71 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு அருகில் அமைந்துள்ள கட்டன கழிப்பறை பராமரித்தல் பணி. | 2.00 |
| 72 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு.தியாகராஜசுவாமி திருக்கோவில் ஆழித்தேரோட்டம் திருவிழாவை முன்னிட்டு தேரோடும் வீதிகள் மற்றும் பத்த கோடிகள் வருகை தரும் வழித்தடங்களில் தற்காலிக கழிவறைகள் பாதகாக்கப்பட்ட குடிநீர் விநியோக அமைப்புகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல். | 1.00 |
| 73 | பொது நிதி 2021–22 | திருவாரூர் நகராட்சிக்கட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நெய்விளக்குத்தோப்பு சமுதாய கழிப்பறை பராமரித்தல் பணி. | 1.20 |
| 74 | குடிநீர் நிதி | திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான மடப்புரம் நீர்தேக்கத் தொட்டியினை பராமரிப்பு செய்யும் பணி. | 3.00 |
| 75 | குடிநீர் நிதி | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் மின்மோட்டார்களில் எற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணி. | 9.50 |

# பொதுசுகாதாரப்பிரிவு

நகரின் சுற்றுப்புற சூழலை துாய்மைப்படுத்தவும் மக்களின் நலன் கருதி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு:

**வாகனங்கள்:**

நகரில் குப்பைகளை அகற்ற கீழ்கண்ட வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) பெரியலாரி | - | - |
| 2) டிப்பர்லாரி | - | 4 |
| 3) கழிவு நீர் லாரி | - | 1 |
| 4) டிராக்டர்,டிரைலர் | - | 1 |
| 5) சைக்கிள் ரிக்ஷா | - | - |
| 6) காம்பாக்டர் | – | 2 |
| 7) தள்ளுவண்டி | – | 40 |
| 8) ஆட்டோ | – | 5 |

மேற்படி வாகனங்கள் மூலம் தினசரி சுமார் 22 மெ.டன் குப்பைகள் நகரிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறது. அவ்வாறு அப்புறப்படுத்தப்படும் 13.2 மக்கும் குப்பைகளை இந்நகராட்சியில் உள்ள 8 OCC மற்றும் 3MCC க்கு கொண்டு செல்லப்படுகிறது. இதில் OCC க்கு 4 MT மக்கும் குப்பையும் MCCக்கு 9MT மக்கும் குப்பையும் கொண்டு செல்லப்படுகிறது. மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் 8.8ல் 5Mt அறியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் கம்பெனிக்கும் அனுப்படுகிறது. 3MT பிளாஸ்டிக் கழிவுகள் விற்பனை மற்றும் விற்பனை செய்ய இயலாத கழவுகள் மற்றும் 0.980 அபாயகராமான கழிவுகள் அந்தந்த மையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

**பிறப்பு , இறப்பு , நோய் தடுப்பு வசதிகள்:**

அறிக்கையாண்டில் பதிவான பிறப்புகள் ( 2021-2022)

| | | |
|---|---|---|
| பிறப்பு | – | 1875 |
| இறப்பு | – | 699 |
| இறந்து பிறந்தவை | – | 4 |

**தடுப்பூசி மற்றும் சொட்டு மருந்து:வழங்கப்பட்ட விபரம்**

இந்நகரபகுதியில் பிறந்த குழந்தைகளுக்கு தடுப்பூசி திட்டம் மற்றும் சொட்டுமருந்து திட்டத்தின்கீழ் மேற்கண்டவாறு நிதியாண்டில் இலக்கீடு நிர்ணயித்து சாதனை எட்டப்பட்டது.

**இறப்பும் தொற்றுநோய்களும்:**

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் பதிவான இறப்புகள( 2021-2022) | 699 |
| இறந்து பிறந்தவை ( 2021-2022) | 4 |
| சென்ற ஆண்டு இறந்து பிறந்தவை (2021-2022) | 4 |

அறிக்கையாண்டில் காலரா நோய் போன்ற தொற்றுநோய்களால் யாரும் மரணம் அடையவில்லை. தொற்றுநோய் பரவாமல் தடுக்க எல்லா சுகாதார ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. 2.11.58ம் தேதிய 3522 எச் எண்ணுள்ள அரசாணையின் அனுமதிக்கப்பட்ட யானைக்கால் வியாதி தடுப்பு திட்டம் செயல்பட்டது.

**இறப்பு காரண பட்டியல்:**

| | |
|---|---|
| சுவாச நோய் | 186 |
| எலும்புருக்கி நோய் | 0 |
| இருதய கோளாறு | 229 |
| நாய்க்கடி | - |
| தீப்பிடித்து இறந்தவர்கள் | - |
| சர்க்கரைநோயினால்இறந்தவர்கள் | 176 |
| புற்றுநோய் | 15 |
| மற்ற வியாதிகள் | 93 |

**கலவை உரத்தயாரிப்பு:**

திடக்கழிவுமேலாண்மைதிட்டத்தின்படி 2020-2021 ம்ஆண்டில் 146ஆகூ உரம்ரூ.53350/-க்குவிற்பனைசெய்யப்பட்டது.

**உணவு கலப்பட தடுப்பு சட்டம்:**

உணவு கலப்பட தடுப்பு சட்டத்திற்கு மாற்றாக உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் சட்டம் ஆக 2011 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சட்டம் அரசுத்துறையில் தனித்துறையாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சியில் உணவு கலப்பட தடைச்சட்டம் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

**விழாக்களும் உற்சவங்களும்:**

இந்நகரில் உள்ள தியாகராஜ சுவாமி திருக்கோவிலின் தேர்திருவிழா 12.03.2022அன்று நடைபெற்றது. இந்நகராட்சியில் பயணிகள் வரி எதுவும் விதிக்கப்படவில்லை.

**டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு உதவித்திட்டம்**

இத்திட்டம் துணைஇயக்குநர் சுகாதாரப்பணிகள் , திருவாரூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு திட்டம்**

இத்திட்டம் 2017 -2018ம் ஆண்டு முதல் துணைஇயக்குநர் சுகாதாரப்பணிகள் , திருவாரூர் அவர்களால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மருத்துவ கழிவுகள்**

மருத்துவமனைகள் கிளினிக் நடத்துபவர்கள் மற்றும் நோய்கிருமி பரிசோதனை கூடங்கள் நடத்துபவர்கள் தங்களது மருத்துவமனை கழிவுகளை சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறில்லாமல் மற்ற கழிவுகளுடன் கலந்து தெருவில் எரிவதோ அல்லது நகராட்சி குப்பைதொட்டிகள் குப்பை வண்டிகளில் சேர்க்ககூடாது என அறிவிப்பு வழங்கப்பட்டு மருத்துவ கழிவினை நகராட்சி குப்பையில் சேர்த்திடாமல் 15.3.2002 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திடக்கழிவு மேலாண்மை விதிகள் - 2016**

திடக்கழிவு மேலாண்மை விதிகளின் 2016ன்படி மக்கும் குப்பை, மக்காகுப்பை என இரு வகையாக தனித்தனியே பிரித்தும், இருவகை கழிவுகளை அறிவியல் முறைப்படி அழித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி வீட்டிற்கு வீடு சென்று மக்கும் குப்பை, மக்காகுப்பை என சேகரிக்கும் முறை வார்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் சிறப்பாக செயலாக்கம் செய்திட துணை விதிகள் 2016 ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் படி பயணியர் கட்டணம் நிர்ணியிக்கப்பட்டுசொத்துவரியுடன் சேர்த்து 01.07.2017 வசூல் செய்யப்பட்டுவருகிறது.

## சீருடைகளும் காலணிகளும் வழங்கும் திட்டம்:

அறிக்கையாண்டில் நகராட்சியில் பணிபுரியும் 62 துப்புரவு பணியாளர்களுக்கும் சீருடை பெற தகுதியுடைய மற்ற பணியாளர்களுக்கும் தலா 2 செட் வீதம் வழங்கப்பட்டது மற்றும் அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

## பொது:

இந்நகராட்சியில் பணியாற்றும் எல்லா துப்புரவு பணியாளர்களுக்கும் அவர்களின் வாழ்க்கை தரத்திற்கேற்றவாறு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. நகராட்சி மூலமாக 37 வீடுகள் துப்புரவு பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

தூய்மைஇந்தியாதிட்டத்தின்கீழ்பரப்புரையாளர்களைகொண்டுநகரில்பொதுமக்களுக்குதிடக் கழிவுமேலாண்மை, பிளாஸ்டிக்கழிவுமேலாண்மை,
மருத்துவகழிவுமேலாண்மைபோன்றவைகுறித்தவிழிப்புணர்வுஏற்படுத்தப்பட்டுSouth Zoneஅளவில்திருவாரூர்நகரம் 2021-2022ம்ஆண்டு

## வரி: மற்றும் வரியிலா இனம்

அறிக்கை ஆண்டில் 2020-2021-வரி மற்றும் வரியிலா இனங்களின் மூலம் நகராட்சியின் கேட்பு, வசூல், நிலுவை பின்வருமாறு இருந்தது.

வரி மற்றும் வரியிலா இனங்கள்

| | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | | சதவிகிதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| சொத்துவரி | 310.67 | 323.85 | 634.52 | 119.55 | 225.05 | 344.60 | 191.12 | 98.80 | 289.92 | 38.48 | 69.49 | 54.31 |
| தொழில்வரி | 80.61 | 70.77 | 151.38 | 12.16 | 52.47 | 64.63 | 68.45 | 18.30 | 86.75 | 15.09 | 74.15 | 42.70 |
| குடிநீர் கட்டணம் | 52.80 | 24.06 | 76.86 | 6.81 | 11.41 | 18.22 | 45.99 | 12.65 | 58.64 | 12.90 | 47.43 | 23.70 |
| வரியிலா இனம் | 249.10 | 322.00 | 571.11 | 180.22 | 2 27.34 | 407.56 | 68.88 | 94.66 | 163.54 | 72.35 | 70.60 | 71.36 |
| காலிமனை வரி | 48.68 | 13.45 | 62.12 | 9.20 | 4.09 | 13.30 | 39.48 | 9.35 | 48.83 | 18.90 | 30.45 | 21.40 |
| பாதாள சக்கடை கட்டணம் | 101.89 | 75.32 | 177.21 | 21.92 | 32.22 | 54.14 | 79.97 | 43.10 | 123.07 | 21.51 | 42.78 | 30.55 |
| SUC | 37.74 | 51.70 | 89.44 | 15.25 | 33.25 | 48.51 | 22.48 | 18.45 | 40.93 | 40.42 | 64.32 | 54.24 |
| மொத்த கூடுதல் | 881.49 | 881.15 | 1762.64 | 365.11 | 585.83 | 950.96 | 516.37 | 295.31 | 811.68 | 219.65 | 399.22 | 298.26 |

அறிக்கையாண்டில் நிலுவையில் இருந்த பெரும்பாலான இனங்களில் வசூல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது.

## கடன்கள்

பாதாள சாக்கடை திட்டம் மற்றும் புதிய பேருந்து நிலைய கட்டுமானத்திற்கு TNUDF நிறுவனத்தில் கடன் பெற்று பாதாள சாக்கடை திட்டப்பணி முடிவுற்று இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. புதிய பேருந்து நிலைய கட்டுமானபணிமுடிவுற்று2019-ம்ஆண்டுமுதல்பயன்பாட்டில்உள்ளது. முன்னேற்றத்தில் உள்ளது. மேலும் கூட்டு குடிநீர் திட்டத்திற்கு பெறப்பட்ட கடன் தொகை ரூ.2,28,66,000/- மாநில நிதி ஆணைய பகீர்வு நிதி முலம் செலுத்தப்பட்டுள்ளது இது தவிர சிறப்பு சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அரசிடமிருந்து ரூ.880.90லட்சம் மான்யமாக வரப்பெற்று சிறப்புசாலை திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு இயற்கை இடர்பாடுகள் மானிய நிதியாக ரூ.494.565லட்சம் அரசிடமிருந்து வரப்பெற்று பணிகள் நடைபெற்று வருகிறது.

## சேமநலநிதி வரவு செலவுகள்

வரவு ரூ.20051133/- செலவு ரூ.12079623/-

## தணிக்கை தடைகள்

இந்நகராட்சியில் தணிக்கை 2020-21 வரை தணிக்கை முடிவடைந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் தணிக்கைத்தடைகள் 421 நிலுவையில் உள்ளது. மேற்கண்ட தணிக்கைபத்திகளை நீக்கம் செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. கடைசியாக ம் நாள் தணிக்கை கூட்டமர்வு நடைபெற்றது.

## புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம் :

4 நகராட்சி துவக்கப்பள்ளிகளிலும் 2 நடுநிலைப்பள்ளிகளிலும் சத்துணவு மையங்கள் பராமரிக்கப்பட்டு 5 வயது முதல் 9 வயது வரைஉள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நடுநிலைப்பள்ளி 6 முதல் 8 வகுப்பு முடிய 10+14 முடிய வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டுவருகிறது. நாள் ஒன்றுக்கு 345 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளி மையத்திற்கும் ஒரு சத்துணவு அமைப்பாளரும் ஒரு உதவியாளரும் ஒரு சமையலரும் பணிபுரிந்து வருகிறார்கள். இத்திட்டத்திற்கென ஒருஉதவியாளர் மற்றும் கணக்கர் பணிபுரிகிறார்.

5+9 வயது வரையுள்ள 4 மையங்களில் 3 அமைப்பாளர்களும், 3 சமையலர்களும், 3உதவியாளர்களும் பணிபுரிந்துவருகின்றனர்.

10+14 வயது பிரிவு வரை உள்ள 2 மையத்தில் 1 அமைப்பாளர் 1 சமையலர் மற்றும் 1 உதவியாளர் பணிபுரிந்து வருகிறார்கள்.

## சத்துணவு திட்டம் (பொது )

இத்திட்டத்தில் 5+9 வரையுள்ள மாணவ, மாணவி ஒருவருக்கு கீழ்கண்ட விகிதப்படி சத்துணவு பொருட்கள் அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு பயனாளிக்கு 1.30 பைசா வீதம் உணவூட்டு செலவினத்திற்கு செலவிடப்படுகிறது. மேலும் உணவு உண்ணும் பயனாளிகளுக்கு தினந்தோறும் ஒரு முட்டை மற்றும் வாரம் ஒரு முட்டை, கொ.கடலை ப.பயிறு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பிரிவின் கீழ் அறிக்கையாண்டில் 1.4.2015 உதவி கருவூலம் மூலம் சம்பளம் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு பள்ளி மையத்திற்கும் ஒரு சத்துணவு அமைப்பாளருக்கு ரூ.7700/- அடிப்படை ஊதியமும் ஒருசமையலருக்கு ரூ.5100/- ஒரு உதவியாளருக்கு ரூ.4100/- வழங்கப்பட்டு வருகிறது.

## மக்கள் சாசனம்:

தமிழக அரசு தனது பணியில் வெளிப்படையானதாகவும் பொறுப்பானதாகவும் இருப்பது அவசியம் என்ற அடிப்படையில் மக்கள் சாசனம் ஒன்றினை வழங்க முடிவு செய்துள்ளது. மக்களுக்கு தெளிவான அடிப்படைக்கொள்கைக்கொண்டு மக்கள் சாசனம் வழங்குவதற்காக ஆணை ஒன்றினையும் அரசு பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில் திருவாரூர் நகர்மன்ற திருவாரூர் நகரமக்களுக்கு மக்கள் சாசனம் ஒன்றினை தயாரித்து மன்றத்தின் 447 எண்ணிட்ட 28.10.98ம் நாளிட்ட தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்பட்டது. இதனையடுத்து புதிய ஈடுபாட்டுடன் செம்மையான மற்றும் சிறப்பான குடிமை சேவைகளுக்கு அளிக்கவும் மன்றதீர்மான எண்.2562 நாள்: 29.10.2004ல் மன்ற ஒப்புதல் பெற்று இரண்டாவது பதிப்பு மக்கள் சாசனம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

## சாசனத்தின் குறிக்கோள்:

1) சேவைகளை விரைவாகவும் தரமுடனும் அளித்தல்
2) சேவைகளை வழங்குவதற்கான கால அளவுகளைத் தெளிவாக அறிவித்தல்
3) நுகர்வோரின் நம்பிக்கை பெறும் வகையில் வெளிப்படையான நிர்வாகத்தை மேம்படுத்துதல்.

பல்வேறு சேவை பணிகளுக்கும் கால அட்டவணைகள் மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சேவைகளை நிறைவேற்ற ஆவன அனைத்தும் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## தகவல் மையம் :

மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சேவைக்கான குறிக்கோள்களை விரைந்து நடைமுறைப்படுத்த ஏதுவாக நகராட்சியில் தகவல்மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல் மையத்தின் மூலம் நகராட்சிக்கு பல்வேறு சேவைகள் தொடர்பாக வருவோருக்கு உரிய வழிகாட்டுதல் செய்யப்படுவதோடு பிறப்பு, இறப்பு, சான்றுகள் வீட்டுவரி தொடர்புடைய சான்றுகள் கட்டிட அனுமதிக்கான உரிமங்கள் குடிநீர் இணைப்பிற்கான அனுமதி போன்றவை உரிய நேரத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. நகராட்சியின் மூலம் அனைத்து ரசீதுகளும் கணினி மூலம் நகராட்சி தகவல்மைய கட்டிடத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களின் வசதிக்காக இரண்டாவது கணினி வரிவசூல் மையம் நகராட்சி பேருந்துநிலைய வளாகத்தில் உள்ள வார்டு அலுவலகத்தில் 21.7.2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்தகவல்மையம் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் நகராட்சியின் பொது சேவையின் செயல்பாடு மேம்பட்டுள்ளது.

## கணிணிப்பிரிவு

நகராட்சியின் செயல்பாடுகள் அனைத்தையும் கணினிமையாக்குவதன் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு கணிப்பொறிகள் வாங்கப்பட்டு கணிப்பொறிகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியை பொறுத்தமட்டில் அன்றாட அலுவல்கள் அனைத்தும் தற்போது கணிப்பொறியிலேயே நகல் எடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. commr.tiruvarur@tn.gov.inஎன்ற இ.மெயில் முகவரி மூலம் நகராட்சியின் தகவல் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. மேலும் திருவாரூர் நகராட்சி பற்றிய தகவல்களை http://123.63.242.116/tiruvarurஎன்ற இணையதளத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். மேலும் வரி தொகை மற்றும் பிறப்பு,இறப்பு சான்றிதழ்கள்online மூலம்**https://tnurbanepay.tn.gov.in**திருவாரூர் நகராட்சியில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகள் E-tendering மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று செயல்பட்டு வருகிறது. மேலும், விபரங்கள் http://tntenders.gov.in/என்ற முகவரியின் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். கணிணிப்பிரிவிற்கென்று உதவி திட்ட அமைப்பாளர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார் மற்றும் புள்ளி விபர குறிப்பாளர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

## பேருந்துநிலைய அபிவிருத்தி:

திருவாரூர் நகராட்சி பகுதியில் சுமார் 1.5 கி.மீ தொலைவில் தியாகப்பெருமாநல்லூர் என்ற இடத்தில் நாகை கடலூர் தேசிய நெடுஞ்சாலையில் (என் எச் 67) 11.08 ஏக்கர் பரப்பளவில் புதிய பேருந்து நிலையம் ரூ.1327.00 இலட்சம் மதிப்பீட்டில் 5022 ச.மீ அளவில் கட்டிடங்கள் கீழ்கண்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் 'பி' வகுப்பு பேருந்துநிலையம் 27.02.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் மூலம் காணொளி கண்காட்சியின் வாயிலாக திறக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- பேருந்து நிறுத்தங்கள் – 35 எண்ணிக்கைகள்
- சிமெண்ட் தளம் – 3380 ச.மீ
- கடைகள் – 60 எண்ணிக்கைகள்
- உணவகங்கள் – 2 எண்ணிக்கைகள்
- பயணியர் காத்திருப்பு அறை – 1 எண்ணிக்கை
- காவலர் கட்டுப்பாட்டு அறை – 1 எண்ணிக்கை
- நேரக்கட்டுப்பாட்டு அறை – 1 எண்ணிக்கை
- பொருட்கள் பாதுகாப்பு அறை – 2 எண்ணிக்கைகள்
- பாதுகாக்கப்பட்ட குடிநீர் அறை – 2 எண்ணிக்கைகள்
- கழிவறை – 2 எண்ணிக்கைகள்

## நகராட்சியின் சிறப்பியல்புகள்:

1) நிதிநிலை திருப்திகரம்.
2) மனிதக்கழிவுகளை மனிதன் அகற்றுவது முற்றிலும் இல்லை
3) மாட்டுவண்டிகள் குப்பை அகற்ற பயன்படுத்தப்படுவதில்லை
4) அனைத்து பணியாளர்களுக்கும், சம்பளம் மற்ற பயன்கள் உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்பட்டுவருகிறது.
5) அனைத்து அலுவலர்கள், பணியாளர்களுக்கு வங்கிமூலம் மாத ஊதியம் வழங்குதல்.
6) ஒய்வுபெறும்பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் ஒய்வுபெறும் நாளன்றே காசோலை மூலம் அனைத்து பணபயன்களும் பட்டுவாடா செய்யப்படுகிறது.
7) நூலகவரி அந்தந்த மாதங்களில் செலுத்தப்படுகிறது.
8) கடன்களுக்கான தவணைத்தொகை முறையே செலுத்தப்பட்டு வருகிறது.
9) பணியாளர்களுக்கு சிக்கனக்கடன் வசதிச்சங்கம் துவங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.
10) கணிணிப்பயன்பாட்டில் சிறப்பிடம் கணினி மூலம் வரி - வரியிலா இனங்கள் ரசீதுவழங்குதல்
11) துப்புரவு பணியாளர்களுக்கு தனியாரைப்போன்று சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.
12) தினமும் காலை 2 மணிநேரம் மாலை 1 மணி நேரம் குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது.

## நிர்வாகம் :

அறிக்கையாண்டில் நகராட்சியின் பல்வேறு பணிகளையும் சீரோடும் சிறப்போடும் செயல்படுத்தி அதன் பயன்கள் பொதுமக்களுக்குச் சென்றடைய ஒத்துழைப்பு நல்கி வரும் ஆணையர் மற்றும் நகராட்சியின் பணிகளை நிறைவேற்றிட அயராது பாடுபடும் பொறியாளர், துப்புரவு அலுவலர், வருவாய் ஆய்வர்கள், வருவாய் உதவியாளர்கள், நகரமைப்பு ஆய்வாளர்கள் மற்றும் மேலாளர், கணக்கர் உட்பட அனைத்து பிரிவு உள் மற்றும் புற பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

****நன்றி****